**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 140/2024** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **நாச்சிமுத்து** |
| Father Name | : | **பெருமாள்** |
| Age | : | **67** |

**Accused absent.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது காசிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கட்டிட வேலை பார்த்து வருகிறேன். எதிரி வெற்றிவேல் கத்தாரில் இருந்து எனக்கு போன் செய்து அவரது மனைவி ஊரில் இருப்பதாகவும், அவர் சொல்வது போல் வீடு கட்டிக் கொடுக்கும் படியும் சொன்னார். நானும் அவர் சொன்னது போல் வீடு கட்டிக் கொடுத்தேன். எனக்கு வர வேண்டிய தொகை ரூபாய் 11,50,000/- நிலுவையில் இருந்தது. அதில் ரூபாய் 1,50,000/- கழித்துவிட்டு மீதம் ரூபாய் 10,00,000/-ஐ கொடுப்பதாக சொன்னார்கள்.

2. அதன்படி கடந்த 01.08.2024 ஆம் தேதி எதிரி ஊருக்கு திரும்பிய பின்னிட்டு, நானும் மோகன்ராஜ் என்பவரும் மதியம் சுமார் 01.40-01.50 மணி அளவில் நாங்கள் வீடு கட்டிய இடத்திற்கு சென்றோம். அப்போது எதிரி மற்றும் அவரது மனைவி மகேஸ்வரியும் வீட்டில் இருந்தார்கள். நான் பணம் கேட்டபோது, எனக்கு பணம் கொடுக்க முடியாது என்றும் மீண்டும் பணம் கேட்டு வரக்கூடாது என்று சொல்லியும் என்னை பார்த்து எதிரிகள் இருவரும், "தாயோலி, இந்த இடத்திலிருந்து போயிடு உனக்கு பணம் எல்லாம் தர முடியாது" என்று சொன்னார்கள்.

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.03 17:52:20 +0530

3. நான் எனக்கு எப்போது பணம் கொடுத்தீர்கள் என்று பேசிக்கொண்டு இருந்தபோது எதிரி வெற்றி எனது சட்டையை பிடித்து இழுத்து எனது இடது கன்னத்தில் ஓங்கி அறைந்து கீழே தள்ளி வலது பக்கம் மார்பில் எட்டி உதைத்தார். எனக்கு ஏற்கனவே stenth வைக்கப்பட்டுள்ளது. எதிரிகள் இருவரும் என்னை பார்த்து "தாயோலி இந்தப் பக்கம் வந்தா உன்னை வெட்டி போடுவேன்" என்று மிரட்டினார்கள். உடன் வந்த மோகன்ராஜ் என்னை கோபி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். நான் கோபி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் அங்கு வந்து விசாரித்து என்னிடம் விசாரணை வாக்குமூலம் பெற்றார்கள். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் அதனை போலீசார் படித்து காண்பித்தார்கள் **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறதுன**

4. எனக்கு எதிரிகளை பார்த்தால் அடையாளம் தெரியும். **( எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை, அவர்களது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகளின் அடையாளத்தை பொருத்தவரையில் ஆட்சபினை எதுவும் தெரிவிக்கப்படவில்லை).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. கத்தாரில் இருந்து எதிரி எனக்கு போன் செய்து அவரது மனைவி கேட்பது போல் வீடு கட்டிக் கொடுக்க சொன்னார் என்ற விவரத்தினை எனது புகாரிலோ அல்லது விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றாலும் தற்போது தான் முதன்முறையாக சொல்கிறேன் என்றாலும் சரிதான். வீடு கட்டுவது சம்பந்தமாக

எங்களுக்குள் ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால் சரிதான்.

2. அதேபோல், எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 11,50,000/- நிலுவை தொகையில் கழித்துக் கொண்டு ரூபாய் 10 லட்சம் மட்டுமே கொடுப்பதாக கூறிய விவரத்தை எனது புகாரிலோ விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வீடு கட்ட செய்த செலவினங்களை காட்டும் பில்களை போலீசில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. மோகன்ராஜ் என்பவர் எனது துணையாக வேலை பார்ப்பவர் என்றால் சரிதான். அந்த வீடு எப்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டது என்பதை பற்றியோ, எப்போது வீட்டில் கிரகப்பிரவேசம் செய்யப்பட்டது என்ற விவரங்களை புகார் வாக்குமூலத்திலோ, விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. இந்த வழக்கு சம்பவ தேதிக்கு முன்பாகவே நிலுவைத் தொகை சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு என்னையும் எதிரிகளையும் வர வைத்து பைசல் பேசப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பைசல் பேசியபோது காவல்துறையின் அறிவுறுத்தலின்படி ஒரு கட்டிட பொறியாளரை கொண்டு கட்டிடம் முழுமையாக அளக்கப்பட்டு அதன் மதிப்பீடு கணக்கிடப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பைசல் இந்த வழக்கு சம்பவ தேதிக்கு இரண்டு நாட்கள் முன்பாக பேசப்பட்டது. அவ்வாறு பைசல் பேசப்பட்டதில் முடிவு எட்டப்படவில்லை என்றால் சரிதான்.

4. நான் எதிரிக்கு வீடு கட்டி கொடுத்த இடத்தை சுற்றிலும் வெற்றிவேலுக்கு சொந்தமான தென்னந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி தென்னந்தோப்பு வழியாக சென்று எதிரியின் வீட்டிற்கு முன்பாக நின்று தான் பணம் கேட்டேன் என்றால்

தென்னந்தோப்பிற்கு செல்லும் எதிரிக்கு சொந்தமான தடத்தில் எதிரியை பார்த்து தான் பணம் திருப்பி கேட்டேன். மேற்படி பணம் கேட்கும் நிகழ்வு சுமார் அரை மணி நேரம் நடந்தது. எதிரி வெற்றிவேல் என்னை மார்பில் எட்டி உதைத்தார் என்று சொல்வதும், நான் இதயத்தில் டென்த் வைத்துள்ளேன் என்று சொல்வதும் பொய் என்று சொன்னால் சரியல்ல.

5. சம்பவம் இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 8 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மேற்படி குன்னத்தூர் காவல் நிலையத்திற்கு அருகில் குன்னத்தூர் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இருந்து கோபி அரசு மருத்துவமனை செல்ல வேண்டுமென்றால் குன்னத்தூர் காவல் நிலையத்தை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். என்னிடமும் மோகன்ராஜிடமும் செல்போன் உள்ளது என்றால் சரிதான். நான் கோபி அரசு மருத்துவமனைக்கு சென்றடைந்த போது மதியம் சுமார் இரண்டு மணி இருக்கும்.

6. நான் மருத்துவமனையில் மருத்துவரை பார்த்தபோது அவர் கேட்டதன் பேரில் நடந்த விபரங்களை கூறினேன் என்றாலும் அதனை அவர் குறித்துக் கொண்டார் என்றாலும் சரிதான். அரசு மருத்துவர் குறித்துக் கொண்ட விவரத்தில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். அன்றைய தினம் கோபி மருத்துவமனையில் மாலையில் போலீசார் வந்து என்னை பார்த்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு போலீசார் என்னை பார்த்தபோது நான் நடந்து விவரங்களை சொன்னேன் என்றால் சரிதான். மேற்படி மோகன்ராஜ் என்னை அரசு மருத்துவமனையில் சேர்த்து விட்டு மீண்டும் வீட்டுக்கு சென்று விட்டார். நான் மோகன்ராஜிடம் அவர் செல்லும் வழியில் குன்னத்தூர் காவல்

நிலையத்தில் தகவல் கொடுத்துவிட்டு செல்லுமாறு சொன்னேனா என்றால் இல்லை.

7. குன்னத்தூர் போலீசார் மறுநாள் காலை 11.00 மணி அளவில் வந்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். முதல் நாள் வந்த அதே போலீசார் தான் மறு தினமும் வந்தார்கள் என்றால் சரிதான். எனது பார்வை பொதுவாக மங்கலாக தான் இருக்கும். போலீசார் என்னை விசாரித்த போது உடன் வேறு யாரும் இல்லை. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் சொன்ன விதத்தில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சேர்ந்த போது எனக்கு காயம் எதுவும் இல்லை என்று மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் வெளிக்காயம் எதுவும் இல்லை.

8. நான் எதிரியிடம் ஒப்புக்கொண்டபடி கட்டிடத்தை கட்டி முடிக்கவில்லை என்றாலும், அதன் காரணமாக வேறு ஒரு ஆளை கொண்டு எதிரி கட்டிடத்தை கட்டி முடித்தார் என்றாலும், நான் எதிரிக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளேன் என்றாலும், இருப்பினும் நான் பணம் கேட்டு எதிரி மீது குன்னத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் விசாரிக்க போலீசார் அதில் உண்மை தன்மை இல்லை என்று வழக்கு பதிவு செய்ய மறுத்த காரணத்தினால், நான் எதிரி என்னை தாக்கியதாக மருத்துவமனையில் அனுமதித்துக் கொண்டு பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.